மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) இவ்வாண்டு இப்பணியை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டு உள்ளது.

திரு. த. மாரிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பாலம் சுமார் பதினைந்தாண்டுகளாகப் பழுதடைந்து மிகவும் சிரமமாக இருக்கிறது, போக்குவரத்து இதனால் தடைப்பட்டுள்ளது. பஸ், லாரி, ஆகியவை அடிக்கடி செல்ல வேண்டிய ரோடாக அமைந்திருப்பதால் இதற்கு முன்னுரிமை கொடுத்து விரைவில் பணி தொடங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, 1981–82—இரண்டாம் பாகத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டு, இதற்காக 6 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. த. மாரிமுத்து : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பாலம் குளத்தின் கரை மீது அமைந்துள்ளதால் குளத்திலிருந்து தண்ணீர் வெளியேறாமலும், பாசன வசதி பாதிக்காமலும் பாலம் கட்டும் வேலை ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அவைகளையெல்லாம் கவனத்தில் கொண்டுதான் இந்தப் பாலம் கட்டப்படும்.

நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறை பணியாளர்களை ஒரே தொகுதிமுறையின்கீழ் கொண்டு வரும் திட்டம்.

*வினா எண். 150—திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறை இலாகா பணியாளர் யாளர்களை 1977-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் ஒரே தொகுதி முறையில் கொண்டுவரும்படி அரசு ஆணையிட்டுள்ளபடி செயல்முறைப்படுத்தப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், தாமதத்திற்கு என்ன காரணம் ?

(இ) எப்போதுமுதல் செயல்படுத்தப்படும் ?

1981 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) (ஆ) மற்றும் (இ) நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையில் பணிபுரியும் அமைச்சுப் பணியாளர்களின்' ஒட்டு மொத்த முதுநிலைப் பட்டியல் 1977-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் அமுல்படுத்தப்பட வேண்டுமென 1977 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 16-ஆம் நாளிட்ட பொதுப்பணித்துறை ஆணை (நிலை) எண். 411 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது இதை ஒரே தொகுதி முறையை செயல்படுத்துவதில் சில தவறுகள் நடந்துள்ளன என்று தமிழ் நாடு அரசு அலுவலர் (சி. மற்றும் டி.) பிரிவு 1979 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் அரசுக்கு மனு செய்தது. இதனால், 1979-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 26-ஆம் நாள் அன்று அரசு அந்த ஆணையை செயல்படுத்துவதை தற்காலிகமாகவும் நிறுத்தியது. மார்ச்சுத் திகளில் தமிழ்நாடு அரசு அலுவலர்கள் ஒன்றியம் என். ஜீ. ஓ. சங்கம் ஒருதொகுதி முறையை உடனே அமுல் செய்யும்படி அரசாங்கத்திற்கு மனு செய்தது. இவற்றையெல்லாம் அரசு பரிசீலித்து பொதுப் பணித்துறையில் ஒரே தொகுதி முறையை செயல் படுத்த கடைப்பிடிக்கும் வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு நெடுஞ்சாலைத் துறையில் இதனை செயல்படுத்துவதற்கான அறிவுரைகளை அரசு தலைமைப் பொறியாளருக்கு 1981-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31-ஆம் நாள் அன்று அனுப்பியது. இதனைச் செயல்படுத்த தலைமைப் பொறியாளர் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, நெஞ்சுசாலை ஊரகப் பணித்துறை இலாக்கா பணியாளர்களை ஒரே தொகுதி முறையில் கொண்டு வந்து செயல்படுத்துவதில் சில தவறுகள் நடந்துள்ளன என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நீக்குவதற்கு உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அப்படி எடுப்பதால் பயன்பெறுபவர்கள் எவ்வளவு பேர் என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே பதிலிலேயே சொல்லிவிட்டேன். 1981-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 31-ஆம் நாள் அன்று பொதுப்பணித் துறையில் இருப்பதைப்போல நெடுஞ்சாலைத் துறையிலேயும் அவைகளை அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. அதனால், பலன் அல்லது பயன் அடைபவர்கள் எத்தனைபேர் என்ற குறிப்பு இல்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறையில் காங்மேன்ளாக வேலை செய்பவர்கள் ஆறாண்டுகள், எட்டாண்டுகளாகியும் இன்னும் நிரந்தரப் பணியாளகளாக ஆக்கப்படாமல் இருக்கிறார்கள். அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அதற்குரிய ஆணைகள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, இந்த நெடு சாலைத் துறையிலிருக்கும் களப் பணியாளர்களை நிரந்தரப் படுத்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகச் சொன்னார்கள். ஜனவரியில் போடப்பட்டு செப்டம்பர் மாதம் வரையிலேயும் கூட அந்த உத்தரவுகள் சரியாக அமல் நடத்தப்படுகிறதா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா? எனக்குக் கிடைத்த தகவல்களின்படி அவர்களால் அதில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்று சொல்லப்படுகிறதே, அதைத் துரிதமாக அமல் நடத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(முற்பகல் 9–30)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிலே முதுநிலைப் பட்டியல் தயாரிக்கப் பட்ட பின்னாலே நடவடிக்கை எடுக்கப்படும். அதனால் தான் அவை தலைமைப் பொறியாளர் அவர்களின் பரிசீலனையில், இருந்து வருகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, 1977-ஆம் ஆண்டுக்குப் முன்னாலே பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலைப் பிரிவிலே ' ஓர்க் சார்ஜ் எஸ்டாபிளிஷ்மெண்ட்டிலே'' பணி புரிந்து வந்தவர்கள், 60 வயது ஆகி ஓய்வு பெற்ற பிறகும் ஓய்வூதியம் அவர்களுக்கு வழங்கப் பெறவில்லை என்று சொல்லப்படுகிறதே, அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, 60 வயது ஆகிய ஓய்வு பெற்றவர்கள் என்று சொன்னார்கள், இப்போது ரிடையரிங் ஏஜ் '58. எப்படி 60 வயதிலே ஓய்வு பெற்றார்கள் என்று தெரியவில்லை ஆகவே தயவுசெய்து குறிப்பினை என்னிடம் கொடுத்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு அவசர நிலை வந்தபோது, சூப்பர் வைசர்களாக இருந்தவர்கள் எல்லாம், ஒட்டு மொத்தமாக ஒரு குறிப்பிட்ட பிரிவினர் வெளியேற்றப் பட்டிருக்கிறார்களே, அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட கோரிக்கைகள் வந்தால் பரிசீலிக்கப்படும்.